# விநாயகர் தோத்திரங்களும் திருமுறைகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ மயம்

விநாயகர் துணை



# ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

## SRI KATPAGA VINAYAGAR TEMPLE

2-4 Bedford Road, Walthamstow, London E 17 4PX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற வாக்கிற்கேற்பவும் எமது ஈழத் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளினாலும் இன்று பல தமிழ்மக்கள் தங்களின் நாடுகளை விட்டு வெளிநாடுகளில் சென்று வாழ்ந்தாலும் அவர்கள் தங்கள் தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், மொழிப் பற்றையும் சமய உணர்வுகளையும் மறக்கவில்லை என்பதை இன்று அந்நிய நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள கோவில்களையும், அவற்றில் செய்யப்படும் பூஜை வழிபாடுகளின் ஒழுங்கு முறைகளையும் கொண்டு நாம் அறிய முடிகின்றது. இந்த வகையில் லண்டன் மாநகரில் அமைந்து திருவிழாக் காண இருக்கும் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். ஆண்டவன் திருவடியை நினைவும், சொல்லும், செயலும் ஒன்றுபட்டு பக்தியுடன் வழிபடுவது வழிபாடு. நினைவால் ஆண்டவன் திருவடியை நினைத்தும், வாயினால் திருமுறை முதலிய தமிழ் மாமறையினை ஓதியும், கையினால் பூ, வில்வம், அறுகு, துளசி கொண்டு இறைவனின் திருவடிகளில் சேர்த்தும் வழிபடுதலே சிறந்த வழிபாடாகும்.

இப்புத்தகத்தில் உள்ள தேவார திருப்பதிகங்களை படித்து எமது நினைவும், சொல்லும் ஒன்றுபட்டு இறைவனை வழிபட்டு நிறைவடைவோமாக.

**திருமதி. உதயவேணி குருபரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் துதி

ஐந்து கரத்தானை ஆனை முகத்தானை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுக சரணம் சரணம்
சிலைமலை யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவரு மொருபரை சரணம் சரணம்
உமைசிவ அம்பிகை சரணம் சரணம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக் கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமர் சார்வார் தமக்கு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்னிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி என்றிட என் கவலை நீங்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் நாமம்

## திருச்சிற்றம்பலம்

மங்கலம் அருளுக ஐங்கர முதலே
மலர் சிவநாம வழிபுக ளுறவே
கஜமுக கஜமுக கணநாதா
சிவகண வந்தித குணநீதா
ஒருகொம் பிருசெவி மும்மதமோடு
ஓதரு நாள்வாய் ஐங்கரனே
பெருகுங் கிருபைக் குணகடலே
பேசரு ஞானப் பெருவெளியே
உமைதரு பாலா குருமணியே
உந்தன் அடைக்கலம் அடியேனே
ஏழைக் கென்றும் துணைபுரிவாய்
ஈஸ்வரி பாலா ஏரம்பா
வரதா வரதா நல்வரம் நீ தா
வந்து நிதம் அருள் தந்திடுவாய்
கற்பவர் தம்முளம் நிற்பவனே
கணபதியாகிய அற்புதனே
சரணம் சரணம் தந்திமுகா
சரவணபவனுக் குயர்துணைவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பஜனை

## திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளை)

யானை முகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
அவல் கடலை சுண்டலும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றித் தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார்
(பிள்ளை)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய, சிவாய நம ஓம், சிவாய நம ஓம், ஓம் நமசிவாய
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம் என்ற ஐந்தெழுத்து
மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார் (பிள்ளை)

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார் (பிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரப் பதிகங்கள்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே

வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனின் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா நீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றாயின வாறு றெவிலக் ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கின வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியினையே குருகினோமே

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுரையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேன் எனலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம் - மாணிக்கவாசகர்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா - சேந்தனார்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு - சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம் - திருமூலர்

சிவனோடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே

## பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின் னஞ்செழுத்தை
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருபுராணம் - சேக்கிழார்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ் - அருணகிரிநாதர்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மான பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து - கச்சியப்பர்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வேள்
ஏறியமஞ்சை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

## மொழி வாழ்த்து

தமிழே ஆதித் தாயே வாழ்க!
தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க!
தமிழ் நாட்டுகும் பிற நாட்டுக்கும்
அமிழ்தாய் அமைந்த தாயே வாழ்க!

ஊரில் தமிழன் மார்பைத் தட்டிப்
பாரில் தமிழன் நானே என்னும்
சீரைத் தந்த தமிழே வாழ்க!
ஓரா உலகின் ஒளியே வாழ்க.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KUMARANS

Imports & Exports

லீலா தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்கள்

லீலா

உங்களுக்கு அன்றாடம் தேவையான லீலா தயாரிப்புப் பொருட்களை
மொத்த விற்பனை விலைக்கு, தொகையாக வாங்கி
சிக்கனமடையுங்கள்

FREE PARKING AVAILABLE FOR OUR CUSTOMERS

குமரன்ஸ்

KUMARANS LIMITED
142 - 144 Hoe Street,
Walthamstow.
London E17 4QR

Tel : 020 8530 3033
020 8521 4955
020 8521 4411

Fax : 020 8530 5655
020 8521 9482



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org